Registered as a Newspaper

★ தேர்மோஸ்ரற் உடன் கூடிய
CROMPTON GREAVES
★ மோட்டாரிற்கு இணைக்கப்பட்ட
சொலிட் பம்புகளையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூ. 1-50

★ துருப்பிடிக்காத இரும்பினுலான அச்சு
★ கல்சியம் கூடிய நீரில் நீண்டகாலம் பாவிப்பதற்கென விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட ஜேர்மன் வாட்டசில்
★ பித்தளையினுலானபம்ப்
★ பம்பின் செயற்பாட்டிற்கு ஒரு வருட உத்தரவாதம்
சொலிட் பம்ப்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞு ஆவணி மீ 08 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 28 (24 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 231

## வடக்கிலிருந்து:
# கிழக்கு, மலையகப் பகுதிகளுக்கு
# நேரடி ரயில், பஸ் சேவைகள்

## இந்தியா முன்னின்று நிதி உதவி வழங்கும்

—அலுவலகச் செய்தியாளர் கே. இரத்தினராஜசிங்கம்—

யாழ்ப்பாணம், ஆக. 24

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய மூன்று பகுதிகளிடையேயும் நேரடிப் போக்குவரத்து நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படலாம் என அறியவருகிறது.

அதற்காக வடக்கிலிருந்து கிழக்கிற்கும், மலையகத்திற்கும் நேரடி ரயில், பஸ் சேவைகளை நடத்துமாறு இந்தியா இலங்கையை வலியுறுத்தி இருப்பதாகத் தெரியவந்தது.

உத்தேச நேரடி ரயில், பஸ் சேவைக்கான நிதி உதவியையும் மற்றும் தொழில் நுட்ப உதவியையும் இந்தியா முன்னின்று வழங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் வாழும் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளிடையே நேரடிப் போக்குவரத்துச் சேவைகள் இல்லாமை அவர்களிடையேயான பூரண தொடர்புகளுக்குத் தடையாக உள்ளது. அதனை நிவர்த்திசெய்ய வேண்டும் என இந்தியா விரும்புகிறது.

அதன்பொருட்டு வடக்கிலிருந்து கிழக்கிற்கும் மலையகத்துக்கும் நேரடி ரயில், பஸ் சேவைகள் நடைபெற வேண்டும் எனவும் இந்தியா கருது கிறது.

தமிழ்ப் பகுதிகளுக்கு இடையில் நேரடிப் போக்குவரத்துச் சேவைகளை நடத்துவதற்கு நிதி உதவி, மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்க முடியும் என இந்தியத் தரப்பில் இலங்கைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய உதவியோடு நேரடி போக்குவரத்துச் சேவைகளை ஆரம்பிக்க இலங்கை சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் அறியவந்தது.

இது தொடர்பான சகல அறிக்கைகளையும் திட்டங்களையும் இந்தியா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எச். டபிள்யூ. ஜெயவர்த்தன உதவுவார்

கொழும்பு, ஆக 24

ஜனதிபதி கொலை முயற்சிச் சம்பவம் பற்றிய விசாரணைக்கு டாக்டர் எச். டபிள்யு. ஜெயவர்த்தன உதவுவார்.

இவ்விசாரணை சம்பந்தமாக ஜனதிபதிக்குத் தேவையான ஆலோசனைகளை டாக்டர் ஜெயவர்த்தன வழங்குவார் (இ-எ)



இலங்கை வங்கியின் ''பிள்ளைகள் சேமிப்புத் திட்டம்'' அறிமுகவிழா நேற்று யாழ். பிரதான கிளையில் நடைபெற்றது. விழாவை இலங்கை வங்கியின் யாழ் பிரதேச முகாமையாளர் திரு. எம் கனகரத்தினம் மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.

## இலங்கை வங்கியில் பிள்ளைகள் சேமிப்பு திட்டம் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஆக 24

இலங்கை வங்கியின் பிள்ளைகள் சேமிப்புத் திட்டம் ஏனைய பல திட்டங்களைவிட பலவித நன்மைகளைக் கொண்டு வரும்.

இலங்கை வங்கியின் பிள்ளைகள் சேமிப்புத் திட்ட அறிமுக விழாவில் தலைமைவகித்து உரை நிகழ்த்திய வங்கியின் பிரதேச முகாமையாளர் திரு. எம். கனகரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று இலங்கையின் சகல மாவட்டங்களிலும் புதிய திட்டத்தின் அறிமுக விழாக்கள் நடைபெற்றன. யாழ். இலங்கை வங்கி பிரதான கிளையில் நடைபெற்ற இவ் விழாவில் யாழ் மாவட்ட முகாமையாளர் திரு.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாற்றுச் சிறுநீரகம் பெற வேலூர் பயணம்

### யாழ் வாலிபருக்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கம் உதவி

யாழ் பிரசை ஒருவர் சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சை செய்வதற்கு இந்திய செஞ்சிலுவைச்சங்கம் உதவியுள்ளது.

திருஞானசம்பந்தசாமி என்ற இந்த நபர் பலாலியில் இருந்து நேற்று விசேஷ விமான மூலம் சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

விமான ஏற்பாடுகளை இந்திய இராணுவ உயரதிகாரி மேஜர் ஹர்கீரத்சிங் செய்திருந்தார்.

இவருக்கான மாற்றுச் சிறுநீரகத்தை வழங்கும் ஒருவரும் அவரது மனைவியும் திருஞானசம்பந்தசாமியின் மனைவியும் அந்த விமானத்தில் பயணமானுர்கள்.

சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் வேலூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்படுவார்.

## மகசீன் சிறைக்கைதிகள் விடுதலைக்கு உதவுக!

### இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் சிங்கராயர்

யாழ்ப்பாணம், ஆக. 24

மகசீன் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்வதற்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கம் இந்திய அரசு ஊடாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஸ்ரீலங்கா அரசின் இராணுவப்பிடியில் இருந்து விடுதலையான வண பிதா சிங்கராயர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகவீனம் அடைந்திருக்கும் வண பிதா சிங்கராயரைப் பார்வையிடச் சென்ற இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியிடமே அவர் இவ்

(6ம் பக்கம் பார்க்க)

## டிக்ஷிற்றுக்கு குண்டு துளைக்காத கார்

கொழும்பு, ஆக. 24

குண்டு துளைக்காத கார் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஷிற்றுக்கு புதுடில்லியில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகக் கட்டடத்தைப் பாதுகாக்க, 25 பேர் கொண்ட 'கறுப்புப் பூனை' வீரர்களும் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர். (இ-எ)

### மாகாணசபை அதிகாரம்

## மேலும் இரண்டு கட்ட பேச்சுக்கள் நடக்கும்

கொழும்பு, ஆக. 24

மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்களுக்கு இறுதி வடிவம் கொடுப்பது சம்பந்தமாக கொழும்பில் நடந்த பேச்சுக்களை முடித்துக்கொண்டு இந்திய அரசு அதிகாரிகள் குழு சனிக்கிழமை காலை புதுடில்லி திரும்பியது.

அடுத்தகட்டப் பேச்சுக்கள் புதுடில்லியில்

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் கூடுறதுக்குப் பதில், அது சம்பந்தமாய் கட்டப் பேச்சுக்கள் தான் கூடிக்கொண்டு போகும்போலை இருக்கு...!

## 70 சதவீத ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டுவிட்டன

### தூதுவர் டிக்ஷிற் கருத்து

கொழும்பு, ஆக. 24

போராளிகள் 70 சதவீதமான ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டனர் என்றே நான் கருதுகின்றேன்.

கொழும்பில் உள்ள இந்தியத்தூதர் திரு. ஜே. என். டிக்ஷிற் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போராளிகள் வைத்து இருந்த கனரக ஆயுதங்களில் 80–85 சதவீதமானவை ஒப்படைக்கப்பட்டுவிட்டன.

கேள்வி: எஞ்சியுள்ள ஆயுதங்களைத் தேடிக் கண்டுபிடித்து கைப்பற்றும் பணியில் இந்திய அமைதிப்படை ஈடுபடுமா?

டிக்ஷிற்: ஒப்படைப்பு முறையாக நடைபெறுகின்றது. எஞ்சியுள்ள ஆயுதங்களையும் சமா

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிக்கொடி இறக்கிய சிப்பாய்கள்

வடமராட்சி, ஆக 24

தொண்டமானறு ஆலயத்துக்கு அண்மையில் கட்டப்பட்ட புலிக்கொடியை ஸ்ரீ லங்கா சிப்பாய்கள் இறக்கியதுடன் புலிகளினுல் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளையும் கிழித்தனராம்.

இதனுல் தொண்டமானறு பகுதியில் புலிகளுக்கும் ஸ்ரீ லங்கா சிப்பாய்களுக்கும் இடையில் பதற்றமான நிலைமை இருந்து வருகிறது.

ஸ்ரீலங்கா சிப்பாய்கள் தொண்டமானறு பாலத்தைத்தாண்டி ஆலயப் பக்கம் வரக்கூடாது என்று புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-160)

### எதிர்பார்க்கப்பட்டது போன்று

## பணப் புழக்கம் இன்று இல்லை

### பேச்சுவார்த்தை தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஆக. 24

ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போன்று ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கி யாழ் பிரதான கிளையில் இன்று பணப் புழக்கம் இடம்பெருது.

இலங்கை வங்கியில் பணப்புழக்கம் ஏற்படுத்துவது குறித்து கொழும்பு இலங்கை வங்கி முகாமையாளருடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடைபெறுவருவதாகவும் பேச்சுவார்த்தை முடிவை அடுத்தே இது பற்றிய விபரம் தெரியவரும்எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ–10)

## வாக்கெடுப்பு அடுத்த ஆண்டு முற்பகுதியில்?

கொழும்பு, ஆக. 24

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைவதா? என்பதை அறியும் சர்வஜன வாக்கெடுப்பு அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடக்கலா'ம்.

இப்படி ''வீக்கென்ட்'' ஆங்கில நாளிதழ் செய்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணித் தலைவர்கள் சென்னை திரும்புகின்றனர்

கொழும்பு, ஆக. 24

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் எம். சிவசிதம்பரம், இரா. சம்பந்தன் ஆகிய இருவரும் இன்று (திங்கள்) சென்னை திரும்புகின்றனர்.

கொழும்பில் இலங்கை—இந்திய அரசக் குழுக்கள் நடத்திய பேச்சுக்கள் தொடர்பான விபரங்களை இவர்கள் சென்னையில் கூட்டணியின் ''பொலிற் பீரோ'' கூட்டத்தில் எடுத்துச் சொல்வர். (இ-எ)

### சுபநேரம்

24–8–1987
திங்கட்கிழமை
சுபநேரம்:-
12.05 முதல் 1 35வரை
ராகுகாலம்:–
7.35 முதல்– 9.05வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
அமாவாசை விரதம்

## சூடுபட்ட சேனதிர காலமானுர்

கொழும்பு, ஆக. 24

கடந்த செவ்வாய் நாடாளுமன்ற கட்டடத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயம் அடைந்த நாடாளுமன்ற அதிகாரி நோபர்ட் சேனதிர நேற்றுக் காலமானுர்.

ஏழு தினங்களாக

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தத்தை இன்னும் படித்துக்கொண்டிருப்பதாகக் கூறுகிறுர் கொல்வின்

கொழும்பு, ஆக. 24

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை இன்னும் படித்துக்கொண்டிருக்கின்றோம்.

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்குச் சர்வசன வாக்கெடுப்புத் தேவையா என்பது உயர் நீதிமன்றந்தான் தீர்மானிக்க வேண்டும்.

ஆனல், ஒப்பந்தம் சர்வஜன வாக்கெடுப்புக்கு இடம்கொடுக்காத விதத்தில்தான் தயாரிக்கப்பட்டுள்ளது.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் அவசியம் வராது என்றே நான் எண்ணுகின்றேன்.

முட்டைப் பொரியலை மீண்டும் முழு முட்டையாக்கும்முயற்சிபோன்று அரசமைப்புச் சட்டத்தைக் கருதக் கூடாது.

இப்படி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேட்டியில் தெரிவித்தார். (இ-எ)

## யாழ்குடாநாடு எங்கே இருக்கிறது?

லண்டன், ஆக24

யாழ் குடாநாடு எங்கே இருக்கின்றது?

★ டென்மார்க்கில்.

இந்தக் கேள்வி – பதில் பி.பி.சி உலக சேவை நடத்தும் வாராந்திரப் போட்டியில் இடம் பெற்றது.

'' 1987 பிரிட்டனின் மூளைசாலி'' தெரிவுக்காக இப் போட்டி நடத்தப்படுகின்றது.

நிகழ்ச்சியை நடத்தியவர், யாழ் குடாநாடு இலங்கையில் உள்ளது என்று திருத்தினுர். (இ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தூய மனதிற்குச் சக்தி உண்டு அது அபாயங்களைத் தாண்டித் தன்னைக் காப்பற்றிக் கொள்ளும். வலையில் சிக்காது.

— ராஜாஜி


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 392/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22078

24 8:1987 த.பெ.இல: - 83


## பக்கச் சார்பு வேண்டாம்

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் திரு. ராஜீவ் காந்தியும் கடந்த மாதம் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்துக்கு இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம் என்பதே பெயர்; அதாவது உத்தியோக பூர்வ பதம் அது

சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் சமாதானம் ஏற்படும் எனக்கருதியே அவ்வாறு பெயரிடப்பட்டிருக்க வேண்டும். சமாதானம் உருவானால் அமைதியும் தானாகவே உண்டாகிவிடும் என எதிர்பார்க்கப்பட்டிருக்கலாம்.

ஒப்பந்தம் மூலம் வடக்கு, கிழக்கில் போர் ஓய்ந்து சமாதானமும் அமைதியும் நிலவவேண்டும் என்று அதில் கைச்சாத்திட்ட இரு தலைவர்களும் விரும்பி இருக்கக்கூடும்.

ஏனெனில், ஒப்பந்தம் கைச்சாத்தான போதும், அதற்கு முன்னரும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களே இரத்தக் களரி நடந்த யுத்தப் பிராந்தியங்களாக இருந்தன. அரச பயங்கரவாதம் பல்லாயிரம் தமிழர்களின் உயிரைக் குடித்திருந்தது. தமிழ் மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் தமது உயிரை கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்தார்கள். வடக்கு கிழக்கோடு ஒப்பிடும்போது, தென்னிலங்கை நிலைமை அப்போது சற்று அமைதியானதாக இருந்தது.

ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கில் அமைதியும் வழமை நிலையும் மேற்படலமாகத் தோன்றின. அந்த மேற்படல அமைதியால் தமிழ்மக்கள் உண்மையான மன நிம்மதியையும், நீதியான சமாதானத்தையும் அடைய முடியவில்லை.

ஒப்பந்தத்தின் பின்னரும் திருகோணமலை போன்ற கிழக்குப் பிரதேசத்தில் அரச படைகளின் அடாவடித்தனம் தொடர்வது குறித்தும், அப்பகுதித் தமிழ் மக்கள் தமது சொந்தப் பகுதிகளுக்குத் திரும்பச் சென்று வாழ்க்கை நடத்த முடியாத நிலை குறித்தும் இப்பத்தியில் ஏற்கனவே எழுதியிருந்தோம்.

கிழக்கில் மட்டும் என்ன? வடக்கின் முல்லைத்தீவு மாவட்டமும் அதே நிலையில் உள்ளதை அங்கு நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் எடுத்துரைக்கிறது.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு ஆகிய இடங்களில் வாழ்ந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் அட்டூழியங்களால் அங்கிருந்துகுடிபெயர்ந்த தமிழ் மக்களே அந்த ஊர்வலத்தை நடத்தினார்கள்.

தமது சொந்தப் பகுதிகளுக்கு அவர்களால் திரும்பிச் சென்று குடியிருக்க முடியாத கஷ்ட நிலை; உயிராபத்தான நிலை; ஒப்பந்தத்தின் பின்னரும் தொடர்கிறது.

குறிப்பிட்ட தமிழர் பகுதிகளில் அரசாங்கத்தின் உதவி, ஒத்தாசைகளுடன் குடியேற்றப்பட்ட சிங்களக் குடியினர் அங்கு வாழ்கின்றார்கள், அமைதிப்படை வந்த போதிலும் அவர்களை அங்கிருந்து அகற்ற முடியவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்புத்தர ஸ்ரீலங்கா அரச படையினரும் அங்கு நிலை கொண்டிருக்கிறார்கள்.

சமாதான ஒப்பந்தம் செய்யப்பட்டு என்ன? இந்திய இராணுவம் இங்கு வந்தென்ன? தமிழர்கள் தமது சொந்த மண்ணில் பாதுகாப்பாக, நிம்மதியாக வாழ இன்னும் விதி வரவில்லை.

தமிழ்ப் போராளிகளிடம் இருந்து ஆயுதங்களைப்பறிப்பதில் இருந்த அவசரம், தமிழ்ப் பகுதிகளில் இருந்து ஸ்ரீலங்கா படைகளையும், குடியேற்றப்பட்ட சிங்களவர்களையும் திருப்பி அனுப்புவதில் அமைதிப் படையினருக்கு இருக்கவில்லை.

கைதான தமிழ் இளைஞர்களை முற்றாக விடுவிக்க முடியவில்லை.

அமைதிப் படையினரின் பணி அரசாங்கத்துக்கும், தமிழர்களுக்கும் நீதி வழங்குவதாக இருக்க வேண்டும். ஒரு பக்கச் சார்பானதாக இருக்கக் கூடாது. தமிழர்களின் பாதுகாப்பைப் பலவீனப்படுத்தியும், அவர்களது முந்திய அவலங்களை நீக்காமலும் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவது என்பது கஷ்டமானதாகும். அது அநீதியானதுமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து மட்டும் சொற்ப ஸ்ரீலங்காப்படையினரை விலக்கி வழமை நிலையை உருவாக்குவதால் தனிய தமிழ்ப் பகுதி எங்கும் அமைதியும் சமாதானமும் வந்துவிடும் என்பதல்ல.

தமிழர்களிடமிருந்து ஆயுதங்களைத் திரும்பப் பெறுவதில் உள்ள அக்கறை, தமிழ்ப் பகுதிகளிலிருந்து ஸ்ரீலங்காத் துருப்புக்களைத் தென்னிலங்கைக்குத் திருப்பி அனுப்புவதிலும், சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதிலும் காட்டப்பட வேண்டும்.

அப்போதுதான் பக்கசார்பற்ற, குறைவற்ற நீதியை நிலைநாட்டுவதாகவேனும் இந்தியப் படைகளால் காட்டிக்கொள்ள முடியும்.

நீதியைத் தான் நிலைநிறுத்தாவிடினும், நீதி நிலைநாட்டப்படுவதாகக் காட்டிக்கொள்வதிலேனும் இந்தியா சாமர்த்தியமாக நடந்து கொள்ளும் என்றே நம்புகிறோம்.

# காங்கிரஸுக்கு எதிராக புரட்சி செய்யுங்கள்

## உறுப்பினர்களுக்கு வி. பி. சிங் அழைப்பு

லக்னோ, ஆக.23

இந்திரா காங்கிரஸின் தலைமைத்துவத்துக்கு எதிராகப் புரட்சி செய்யும்படி காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வேண்டுகோள் விடுத்தவர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் விஸ்வநாத் பிரதாப்சிங்.

லக்னோவில் செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் திரு. சிங் இப்படிக் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் பாதுகாப்பு விஷயத்தில் மத்திய அரசுவிட்டுக் கொடுக்கக் கூடாது.

தலைமைத்துவம் இதற்கு உடன்படாவிட்டால் காங்கிரஸ் கட்சியை விட்டு அனைவரும் வெளியேற வேண்டும்.

70 கோடி மக்களின் தலைவரான பிரதமர் 'நான் ஒரு திருடன் இல்லை'— என்று கூறும் நிலை ஏற்பட்டது பெரும் துரதிருஷ்டமாகும்.

இப்படிச் சொல்வதற்குப் பதிலாக பதவியின் கௌரவத்தைக் காப்பாற்றதிரு.ராஜீவ்காந்தி பிரதமர்பதவியைஇராஜினாமாச் செய்து இருக்க வேண்டும்.

இப்படி திரு வி.பி.சிங் தெரிவித்தார். (இ-எ)

## ராஜீவ் பாகிஸ்தான் செல்ல மாட்டார்

இஸ்லாமபாத், ஆக. 23

பிரதமர் ராஜீவ் காந்தி இந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு விஜயம்செய்ய மாட்டார்.

இணை அமைச்சர் நட்வர்சிங் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் காந்தி விஜயம் செய்வதற்கு முதல் அதற்குரிய உகந்த சூழ்நிலைகளை உருவாக்க துணிச்சலாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இப்படி அவர் மேலும் சொன்னார். (இ-எ)

## போபர்ஸிடம் பாகிஸ்தானும் ஆயுதம்வாங்குகிறது

ஸ்டொக்ஹோம், ஆக 23

சுவிடனில் உள்ள போபர்ஸ் நிறுவனத்திடமிருந்து சாம் ஏவுகணைகளை பாகிஸ்தானும் வாங்க ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

# இந்திய அதிகாரி தெஹ்ரான் விஜயம்

## இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு ஈரானிய பிரதமர் ஆதரவு

பஹ்ரைன், ஆக. 23

இந்திய வெளியுறவுச் செயலாளர் அல்பிரட் கொன்சல்வஸ் தெஹ்ரானுக்கு இரகசியப் பயணம் ஒன்றைக் கடந்த வாரம் மேற்கொண்டார்.

ஈரான் பிரதமர் மிர் ஹுசேன் மௌசவியை இவர் சந்தித்தார்.

இலங்கையுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட இந்தியாவின் நிலையை ஈரான் பிரதமர் ஆதரித்தார்.

இந்திய வெளியுறவுச் செயலாளருக்கு ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வேலாயடி விருந்துபசாரம் ஒன்றை அளித்துக் கௌரவித்தார்.

மீரட் கலவரத்தின் போது ஈரானிய பிரசைகள் தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## தொடர்பை துண்டிக்க கோரிக்கை

டுனிஸ், ஆக. 23

அரபு நாடுகள் ஈரானுடன் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று சவூதி அரேபியா வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

மக்காவில் நடந்த படுகொலையைத்தொடர்ந்து தெஹ்ரானில் உள்ள சவூதி அரேபியா, குவைத் தூதரகங்களை ஈரானியர் தாக்கினர் அல்லவா!

அதைத் தொடர்ந்து ஈரானுக்கும் ஏனைய அரபு நாடுகளுக்கும் இடையேயான தொடர்புகளை மீள் பரிசிலனை செய்ய 21 அரபு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் டுனிஸியாவில் மாநாடு நடத்துகின்றனர்.

அந்த மாநாட்டிலேயே சவூதி அரேபியாவின் வெளிநாட்டமைச்சர் அல்பதாஸி இவ் வேண்டுகோளை விடுத்தார்.

### வெளி உலகில்

இந்திய

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

புதுடில்லி, ஆக. 23

இந்திய மத்திய அமைச்சரவையில் பெரிய மாற்றங்கள் அடுத்த மாதம் மேற்கொள்ளப்பட உள்ளன.

புதுடில்லி அரசு வட்டாரங்கள் இப்படித் தெரிவித்தன.

கடந்த 4 மாதங்களில் பல அமைச்சர்கள் ராஜினாமாச் செய்தனர்.

அதன் காரணமாக மத்திய அமைச்சரவையில் ஆறு காலி இடங்கள் இருக்கின்றன.

அவற்றை நிரப்ப வேண்டும்.

பெரும்பாலும் அடுத்த மாத முற் பகுதியில் பெரிய அளவிலான அமைச்சரவை மாற்றத்தை எதிர்பார்க்க முடியும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்து உள்ளன. (இ-எ)

## சோவியத்துக்காக உளவு பார்த்த அமெரிக்க ராஜதந்திரி குற்றவாளி

வாஷிங்டன், ஆக.23

சோவியத்யூனியனுக்கு உளவு வேலை பார்த்த அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இராணுவ நீதிமன்ற விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

மாஸ்கோவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பாதுகாப்பு அதிகாரியாகக் கடமையாற்றிய சமயம் சார்ஜண்ட் லோன்றி என்பவர் சோவியத் இளம் பெண் ஒருத்தியுடன் சிநேகம் கொண்டார்.

பின்னர் இரகசியத் தகவல்களை அவள் மூலம் சோவியத் அதிகாரிகளுடன் பரிமாறிக் கொண்டார்.

அது மட்டுமல்ல அமெரிக்கத் தூதரகக் கட்டடத்தினுள் இரவு நேரத்தில் சோவியத் உளவாளிகளை நடமாடவும் அனுமதித்தார்.

இக்குற்றச் சாட்டுக்களின் மீதே அவர் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

தண்டனை பின்னர் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

### மிராஜில் இருந்து பருப்பு மூடை போடப்பட்டவுடன் ஏன் இந்த திடீர் மாற்றம்:

# பூவா, தலையா என்று கூடப் பார்க்காமல் இணைப்பை ஏற்றார் ஜனாதிபதி

பூவா, தலையா என்று கூடப்பார்க்காமல் ஜனாதிபதி இணைப்பை ஏற்று விட்டார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீது கடந்த வியாழன் நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது.

அப்பொழுது திரு. அனுரா பண்டார நாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டார நாயக்கா மேலும் கூறியதாவது:—

செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் ஜனாதிபதி வானொலியில் பேசினார்.

தென் இலங்கைப்பயங்கரவாதிகளின் வேலை இது என்று ஜனாதிபதி சொன்னார்.

இன்று அனுராதபுரம் கூட தென்னிலங்கைக்குள் வந்து விட்டது.

தென் இலங்கைப் பயங்கரவாதி தான் இத்தாக்குதலை நடத்தினார் என்று ஏன் சந்தேகிக்க வேண்டும்?

பிரபாகரனால் செய்து இருக்க முடியாதா?

புறக்கோட்டை, அரந்தலாவ தாக்குதல்களை அவர்களால் செய்யமுடியும் என்றால் நாடாளுமன்றக் கட்டடத்தாக்குதலையும் அவர்கள் தான் நடத்தி இருக்க வேண்டும் என்று ஏன் எண்ணக் கூடாது?

அவசரப்பட்டு முடிவு எதையும் எடுக்கக் கூடாது.

தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதங்கள் முழுவதையும் ஒப்படைத்து விட்டனரா?

தீவிரவாதிகள் ஆயுதங்களை கிறீஸ் பூசிப் பாதுகாப்பாக நிலத்தினுள் புதைத்து வைக்க பொலித்தீன் உறைகளை ஏராளமாக வாங்குகின்றனர் என்று பி. பி. சி. கூறுகின்றது.

இந்திய அமைதிப் படையினர் ஒவ்வொரு அங்குல நிலமாகத் தோண்டி இந்த ஆயுதங்களை மீட்கப் போகின்றனரா?

இந்திய இராணுவம் இலங்கைக்கு வர அனுமதிக்கும் சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டதாக வெட்கமின்றி இலங்கை அரசு கூறிக் கொள்கின்றது.

ராஜீவுக்குச் சொந்த நாட்டிலே புகழ் மங்கி வருகிறது.

ஒப்பந்தம் ஒன்றை இலங்கையுடன் செய்து கொண்ட பின்னர்தான் ராஜீவுக்கு மீண்டும் செல்வாக்குப் பெருக ஆரம்பித்துள்ளது.

ஒப்பந்தத்தை நாடாளுமன்றம் 2/3 பெரும்பான்மையுடன் ஏற்றுக் கொள்ள மறுத்தால் அல்லது மக்கள் சர்வசன வாக்கெடுப்பில் நிராகரித்தால் இந்தியா இலங்கையை ஆக்கிரமித்து விடுமா?

இலங்கையில் இந்தியாவின் வைஸ்ராயாக திரு. டிக்ஸிற் பணிபுரிகின்றார்.

சமாதானத்துக்கு நாம் எதிரானவர்கள் அல்லர். எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது ஜனாதிபதியின் திடீர் மனமாற்றம் தான்.

மிராஜ் விமானத்தில் பருப்பு மூடைகளைக் கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் போட்டவுடன் இப்படி மனமாற்றம் அடைவதா?

பூவா தலையா என்று கூடப்போட்டுப் பார்க்காமல் இணைப்பை ஜனாதிபதி ஆதரித்து விட்டாரே.

இந்தத் தற்காலிக சமாதான உடன்பாடு வெற்றியளிக்காது.

கோவா, பூட்டான், சிக்கிம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்த இந்திய இராணுவம் செய்தது எல்லோருக்கும் தெரியும்.

இலங்கையும் இப்போது இந்திய இராணுவத்தை வரவழைத்துள்ளது.

ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்கள் எல்லாம் துரோகிகள் என்று கூறப்படுகின்றது. ஆனால் ஒப்பந்தத்தின் உண்மை மறைக்கப்பட்டுள்ளது.

மேற்கு நாடு ஒன்று இங்கு அபிப்பிராயக் கணக்கெடுப்பு ஒன்றை நடத்தியது. அதன் தீர்ப்பு, ஒப்பந்தத்தை பெரும்பான்மையோர் எதிர்க்கின்றார்கள் என்பதே.

ஆகவே பேசாதீர்கள். மக்களைத் தீர்மானிக்க அனுமதியுங்கள்.

இந்தியாவில் இருந்து தீவிரவாதிகளைக் கொண்டு வந்த விமானங்களில் தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடிய இலங்கை அரசுப் படையினர் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டனர்.

இன்று திருமதி பண்டாரநாயக்காவினதும் என்னுடையதுமான டெலிபோன்கள் ஒற்றுக் கேட்கப்படுகின்றன.

எனது வீட்டுக்கு

### நாடாளுமன்றத்தில் அனுரா

வெளியே கொமாண்டோக்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். நான் தொலைபேசியில் பேசும் போது எல்லாம் இந்தக் கொமாண்டோக்கள் அங்கும் இங்கும் ஓடுகின்றார்கள். நான் பேசுவதை ஒலிப்பதிவு செய்வதே அவர்களின் வேலை. என்ன மாதிரியான ஜனநாயகம் இது என்பது தெரியவில்லை.

குறுக்கீடு: படம் பிடிப்பதற்காக இருக்கலாம்.

அனுரா:- ஆம் நீலப் படங்கள் எல்லாமே நீலமாக உள்ளன. தொலைபேசியைத் துண்டிப்பதன் மூலம் எதைப் பெறப்போகின்றார்கள்?

தென் இலங்கையில் சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களைக் கைதுசெய்து விசாரிப்பதில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர். பிரதமர் பிரேமதாசவைத் தெரியுமா? அவருக்கு பொது மக்கள் மத்தியில் செல்வாக்கு உண்டா? ஒப்பந்தம் பற்றி பிரதமர் என்ன சொல்கின்றார்?

இவை தான் பொலீஸார் எமது கட்சிஅமைப்பாளர்களைக் கேட்கும் கேள்விகள்.

இது பற்றிப் பிரதமருக்குத் தெரிவித்துள்ளேன். நான் சொல்வது பொய் என்றால் சிஐடியிடம் இருந்து ஒலிப்பதிவு நாடாக்களைப் பெற்றுப் பார்த்தால் உண்மை வெளியாகும்–

இப்படி அனுரா பண்டாரநாயக்கா சொன்னார்.

**மகரகம எம். பி.**

மகரகம எம். பி. தினேஷ் குணவர்த்தன:

புலிகளுக்குப் பயிற்சி கொடுத்த இந்திய இராணுவத்தினரை எப்படி அமைதிப் படையினர் என்று ஏற்றுக் கொள்வது?

தமிழீழம் கொள்கையைக் கைவிடப்போவது இல்லைஎன்றுசொன்னபிரபாகரன் இன்று இந்திய அரசுடன் ரகசிய உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றார். அந்த உடன்பாடு என்ன என்பது எங்களுக்குத் தெரியவில்லை.

இந்தியாவின் ஒரு மாநிலமாக இலங்கை வந்து விட்டது.

மத்துகம எம். பி. அனில் முனசிங்க:

கொழும்புத் துறைமுகத்தில் இந்திய யுத்தக் கப்பல்கள் நிற்பதும் வடக்கு, கிழக்கில் இந்திய இராணுவத்தினர் முகாமிட்டிருப்பதும் மக்கள் மத்தியில் சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தினுள் கதவுகள் மறைவில் எல்லாம் இயந்திரத் துப்பாக்கிகளுடன் இராணுவத்தினர் நிற்கின்றனர்.

இதுவும் கேள்விக் குறியை எழுப்பியுள்ளது.

பர்மாவில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் முழு அமைச்சரவையையும் சுட்டுக் கொன்ற சம்பவம்தான் நினைவுக்கு வருகின்றது.

அரசு சொல்வதைக் கேட்க மக்கள் இனியும் தயாராக இல்லை.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இருந்த நிலையைத் தென்னிலங்கையில் அரசு ஏற்படுத்தக் கூடாது.

வடபகுதியில் இருந்து வரும் 'சட்டர்டேரிவியூ' பத்திரிகைக்குத் தணிக்கை இல்லை. தென்னிலங்கை பத்திரிகைகளுக்குத்தான் தணிக்கை அமுல் நடத்தப்படுகின்றது.

இலங்கை வானொலி

(5ஆம் பக்கம் பார்க்க)



**குறள்:**

இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை

வாயின் அது வொப்பது இல்.

**பொருள்:**

யாரிடத்திலும் எக்காலத்திலும் மறந்தும் சோர்ந்திருக்காத தன்மை தவறுமல் பொருந்தியிருக்குமானால், அதற்கு ஒப்பான [illegible] வேறொன்று இல்லை.

### சமய சந்நிதிகளில்

## இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஆக.24

நாவற்குழி சித்திவிநாயகர் ஆலய மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

மஹோற்சவம் 15 தினங்கள் நடைபெறும். 6-9-87 தேர்த்திருவிழாவும் 7-9-87 தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (ஓ)

* * *

யாழ்ப்பாணம், ஆக.24

திருநெல்வேலி கிழக்கு தலங்காவற் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

15 நாட்கள் மகோற்சவம் நடைபெறும்.

5-9-87 சப்பறமும், 6-9-87 தேர்த்திருவிழாவும், 7-9-87 தீர்த்தோற்சவமும் இடம்பெற உள்ளன. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் மரகத மயூரப் பெருமாளின் கருணை

★ க. உமாமகேசுவரன் ★

எழில் குலவும் இடங்களையெல்லாம் தனதாக்கிக்கொண்டவன் முருகன். குன்றெல்லாம் எங்குண்டோ ''அங்கெல்லாம் தனது கோயில் இருப்பதாகவும் அவன் கூறுகிறான். பழமுதிர் சோலைகளும் குன்றுகளுமே அவன்குடியிருப்பு

குன்றுதோறும் எதற்காகக் குமரன் கோயில் கொள்கிறான்? குன்றின் உச்சியில் வீற்றிருக்குமவன் அச்செயல்மூலம் 'அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி அவர் மேலானகிய யான் குன்றாக உயர்ந்து நிற்கும் உள்ளங்களிலே தான் கோயில் கொள்வேன் எனக் கூறாமற் கூறுகின்றானென்பதைத் தவிரக் ''குன்றுதோறாடும் குமரன்''என்பதற்கு வேறு பொருளெதுதான் இருக்க முடியும்?

குமரன் தரும் இந்த விளக்கத்தைத் தவறாகப் புரிந்துகொண்டு தமது உள்ளங்களைக் குன்றுக்கும் முயற்சியில் ஒரு கால் இரும்பாகவும் கல்லாகவும் மக்கள் மாற்றி விடுவார்களோ என மகான் ஒருவர் அஞ்சுகிறார். அங்ஙனம் மக்கள் மனதை மாற்றி விடக்கூடாதென எச்சரிக்கை விடுக்கவேண்டுமென்றும் அவர் விரும்புகிறார். அவருக்குத் திருமணம் ஒன்றுபற்றிப் பேசும் வாய்ப்பு வருகிறது சந்தர்ப்பத்தை நழுவ விடாது பயன்படுத்தி விடுகிறாரவர்.

திருப்பரங்குன்றிலே திருமணம். தேவசேநாதிபதியாகிய திருமுருகனுக்கும் தெய்வயானை அம்மைக்கும் தான் திருமணம். மலையடிவாரத்திலே ஒப்பனையை ஒருவாறு முடித்துக்கொண்டு ஒல்கி ஒசிந்து மலைமேல் நடைபயில்கிறார் தெய்வயானை அம்மை. இந்தக் காட்சியை அகக்கண்களாலே தரிசிக்கும் அந்த மகா

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

> இன்று நல்லூர் திர்த்தோற்சவம் நடைபெறுகின்றது. அதையொட்டி இரு கட்டுரைகள் பிரசுரமாகின்றன.

னின் - கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின் — மனச் செவியிலே திருமணத்துக்கெனக் கூடியிருப்போரது உரையாடலும் தெளிவாகவே விழுகிறது.

''தெய்வயானை அம்மைக்கு அற்புதமாக ஒப்பனை செய்திருக்கிறார்கள். ஆனால் ஒப்பனை சற்றே மிகையென்றுதான் தோன்றுகிறது''— இப்படி ஒரு குரல்.

''மிகை என்று அப்படி எதைத்தான் குறிப்பிடுகிறீர்? — இது மற்றொரு குரல்.

''செம்பஞ்சுக் குழம்பை அவர் பாதத்துக்குத் திட்டாமலே விட்டிருக்கலாம். ஏன் தெரியுமா? இந்தத் திருப்பரங்குன்றிலே ஏறும் போதே அம்மையாருடைய பாதங்கள் — பஞ்சிதனின் மெல்லடிகள்— கன்றிச் சிவந்துவிடுமே! இயற்கையாகவே சிவந்த அவர் பாதங்கள் மேலும் கன்றிச் சிவக்கும் வாய்ப்பிருக்கும்போது செம்பஞ்சுக் குழம்பைத் தீட்டிச் செயற்கையாக சிவக்கும்படி வேறு செய்யத்தான் வேண்டுமோ? — ''இப்படி முத்தாய்ப்பு வைக்கிறது முதற்குரல். கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் மெல்ல நகைக்கிறார்கள்.

தெய்வயானை அம்மையின் பாதங்களைப் 'பஞ்சிதனின் மெல்லடி' என்கிறார்கள்; உண்மைதான். திருப்பரங்குன்று கடினமான பாறைகள் மலிந்த மலைதான். ஆனால் தெய்வ குஞ்சரியினது பாதங்களை விட மென்மையான பாதங்கள் இருக்கின்றனவே. அவை இந்தத் திருப்பரங்குன்றை விடக் கடினமான அடுக்கலிலே — கற்பாறைகளிலே—நடக்கின்றனவே. அந்த மென்மையான பாதங்கள் செஞ்சுடர்வை 'வேலுடைய செம்மல்' ஆகிய திருமுருகனின் திருவடித் தாமரைகள். அந்த அடுக்கல் வேறெதுவுமன்று. 'தீயேன் நெஞ்சக அடுக்கலேதான் அது எனது நெஞ்சாகிய புல்லிய அடுக்கலிலும் புனிதனாகிய திருமுருகனின் திருவடித் தாமரைகள் நின்றுலவிக் கன்றுமாயின் அவனது கருணைதான் எத்தகையது. வரையின் பாற் குஞ்சரி நடந்த செயல்' இதைவிடவா புதுமையானது? இவற்றையெல்லாம் இந்த உலகம் என்றுதான் உணரப் போகின்றதோ? அவரது ஏக்கம் அரியதொரு பாடலாக மலர்ந்து அருள் மணம் வீசுகிறது.

பஞ்சிதனின் மெல்லடி
பனிப்ப வரையின்பால்
குஞ்சரி நடந்தசெயல்
கூறு புதுமைத்தோ
செஞ்சுடர்வை
வேலுடைய
செம்மலடி தீயேன்
நெஞ்சக
அடிக்கலிலும்
நின்றுலவும் என்றால்
[தெய்வயானையம்மை
திருமணப்படலம்,
பா. 231]

பஞ்சி - பஞ்சு, பனிப்ப-நடுங்க, வரை-மலை, வை - கூர்மை, அடுக்கல் - மலை.

'செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி' கன்றுது நின்றுலவத்தக்கதாக நமது 'நெஞ்சக அடுக்கலை' - நெஞ்சக்கனகல்லை -நாம் நெகிழ்ந்துருகச் செய்ய வேண்டாமா? 'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்; நினையாதொரு போதும் இருந்தறியேன்' என்ற அப்பரடிகளின் அநுபவப்பேற்றுக்கு அருகதையுடையவராக நம்மை நாம் ஆக்கிக் கொள்ள வேண்டாமா? என்றெல்லாம் மிக்க ஆராமையோடு கேட்கிறார் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள். அப்படி நமது உள்ளங்களைக் குமரன் கோயில் கொள்ளும் குன்றங்களாக ஆக்குதற்கோர் வாய்ப்பினை நல்குமுகமாகவே 'மருவும் அடியார்கள் மனசில் விளையாடும் மரகத மயூரப் பெருமாள்' ஆகிய நல்லைக்குமரன் திர்த்தோற்சவம் கொண்டருளி 'அடியவர்க்கு மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே'. ★



நல்லூரான் கருணை பெற்றிட
வாழ்த்துகின்றோம்

எம்.ரி. சோமசுந்தரம்
அன் சன்ஸ்
199, மின்சாரநிலைய விதி,
யாழ்ப்பாணம்.

# முருகனுக்கு உகந்தவை: வெள்ளியும் கார்த்திகையும்

வி. பி. சர்மா

அலங்காரக் கந்தனும் நல்லூர் கந்தன், ''எந்தாயும், எமக்கருள் தந்தையும் நீயே; கந்தா கதிர்வேலா - எம்வினை தீர்த்தருள்வாய் குகனே' என தினம் தினம் எண்ணற்ற மக்களால் போற்றி வணங்கப்படுகிறான். முருகப் பெருமானுக்கென சிறப்பான தினங்கள் பல இருப்பினும் மஹோற்சவ காலத்தில் இலங்கையின் பல பாகத்து அடியார்களும் ஒன்றுகூடி முருகா.. முருகா... என்ற திருநாம ஒலியை எங்கும் வியாபித்து நிற்கச் செய்வது சிறப்புடையதாகும்.

முத்தியை நாடுவோர் மட்டுமல்ல; இப்பிறவியில் எத்தேவைகளையும் வேண்டி மக்கள் தத்தம் நிலைக்கேற்ப வேண்டி நிற்கின்றனர். பொன்னும், பொருளும் தருபவன் முருகன்; போகமும் திருவும் அளிப்பவன் முருகன்; இகபர சுகங்களை வாரி வழங்குபவன் முருகன்; முருகனே எல்லாமாகி நின்று வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளுகின்றான்.

தமிழ்த் தெய்வமான முருகனின் திருவடிகளும் சிலம்பும், சதங்கையும், தண்டைகளும், ஆறுதிருமுகங்களும், பன்னிருதோள்களும் எம்மை நாடிவிட்டால் நாள் என் செய்யும்? கோள் என் செய்யும்? யமன்தான் நெருங்க முடியுமா? முருகன் திருவடிகளை வணங்குவோருக்கு மரண பயம்தான் ஏது?

முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகன் பெருமையைப் பாடிப்பாடி உயர்வடைந்த புலவர்களும் பக்தர்களும் கணக்கற்றோர். முருகன், சம்புவின் நுதற்கண்ணிலே பொறியாகத் தோன்றிய திருவிளையாடலும், கங்கையை அடைந்த வரலாறும், சரவணப் பொய்கையில் கார்த்திகேயப் பெண்களால் பாலூட்டி வளர்க்கப்பட்டமையும், அயனைச் சிறை செய்தமையும், ஆட்டிலேறி விளையாடியமையும், அசுரர்களை வேரறுத்தமையும், தெய்வயானை - வள்ளி நாயகியை மணம் புரிந்தமையும் அப்பப்பா...முருகன் பெருமையை - கருணையை எல்லாம் நினைவு கூரும் படிக்கட்டுகளல்லவா?

இத்தகைய வலிமையும், திறமையும் கொண்ட முருகனுக்கு வாரத்தில் வெள்ளியும், நட்சத்திரத்தில் கார்த்திகையும், திதியில் சஷ்டியும் சிறப்புடையன இக்காலங்களிலெல்லாம் முருகன் கருணைவேண்டி விரதமிருந்து வணங்கி வழிபட்டு கருணையும் கடாட்சமும் பெறுவோம். ★

## அழகன் முருகன்

கண்கண்ட தெய்வமான முருகன் அடியார்க்கு எளியன் அழகு நிரம்பிய முருகனை சைவத் தமிழ் மக்கள் தொன்று தொட்டு வழிபட்டு வருகின்றனர்.

முருகு என்றால் அழகு, இளமை, கருணை என்று பொருள் முருகன் என்றால் அழகன். கருணை மிக்கவன். இளமையானவன்.

## சண்முகனே

வானோ புனல்பார்
கனன்மா ருதமோ
ஞானோ தயமோ
நவின்றன் மறையோ
யானோ மனமோ
வெனையாண்ட விடந்
தானோ பொருளா
வதுசண்முகனே.

★ ★ ★

வளைபட் டகைமா
தொடுமக் களெனுந்
தளைபட் டழியத்
தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ
ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத்
தொடுவே லவனே.

★ ★ ★

மகமா யைகளைந்
திடவல் லபிரான்
முகமா றுமொழிந்
துமொழிந் திலனே
யகமா டைமடந்
தையரென் றயருஞ்
சகமா யையுணின்
றுதயங் குவதே.

★ ★ ★

திணியா னமனோ
சிலைமீ துனதாள்
அணியா ரரவிந்
தமரும் புமதோ
பணியா வெனவள்
ளிபதம் பணியுந்
தணியா வதிமோ
கதயா பரனே.

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை
காங்கேசன்துறை

முருங்கன் களிமண்புலத்தில் களிமண் ஏற்றிவந்து
தொழிற்சாலையில் பறிப்பதற்கான
கேள்விப் பத்திரம்

காங்கேசன்துறையில் இருக்கும் எமது தொழிற்சாலைக்கு முருங்கன் களிமண்புலத்திலிருந்து லொறிகளில் களிமண் ஏற்றிப் பறிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரையும் சனிக்கிழமையில் பகல் 12-00 மணி வரையும் மீளப் பெறமுடியாத வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 1987-08-26 ஆம் திகதி மாலை 2-00 மணிவரை விநியோகிக்கப்படும்.

கேள்விப்பத்திரகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1987 - 08 - 27 ஆம் திகதி காலை 10-30 மணிக்கு கேள்விப் பத்திரகாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

இங்ஙனம் உண்மையுள்ள
தொழிற்சாலை முகாமையாளர்
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை
1987-08-20 காங்கேசன்துறை.

நல்லைப் பரம்பொருளே! வருக!!

எவர் விஷன்

★ உங்கள் இல்லங்களில் நிகழும் மங்கள வைபவங்களை வண்ணவீடியோ படங்களாக நினைவில் நிலைக்கும் வண்ணம் படம் பிடித்திடவும்

★ T. V. Deck போன்றவற்றில் ஏற்படும் பழுதுகளை தரமாகத் திருத்தி அமைத்துக் கொள்ளவும்.

எவர் விஷன்
21A, மணிக்கூட்டு நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சலுகைக் கட்டணத்தில் குறுகிய காலத்தில்
மானிப்பாய், கொக்குவில், சாவகச்சேரியில்

Computer Programming
&
Data Processing
IN
Baisc Language

★ பயிற்சிக்குரிய சலுகைக் கட்டணம் ரூபா 750/- மட்டும்
★ சேரும்பொழுது செலுத்த வேண்டிய தொகை ரூபா 350/- மட்டும்
★ பயிற்சிக்காலம் 2 மாதம்

● ஆரம்பம்:-
★ திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள் : 31-8-87
★ சனி, ஞாயிறு வகுப்புக்கள்: 30-8-87
O/L படித்த இருபாலாரும் சேரலாம்

UNIKCO COMPUTER CENTRE
282. யாழ்ப்பாண றோட்,
சுதுமலைச் சந்தி,
மானிப்பாய்.

கிளைகள்:
(1) 23, டச் றோட், சாவகச்சேரி, (2) கே.கே.எஸ். றோட், 3-ம் கட்டை, கொக்குவில்.

முக்கிய அறிவித்தல்

இடம்மாற்றம்

எமது ஸ்தாபனம் மீண்டும் பழைய இடத்தில் 24-08-87 திங்கட்கிழமை தொடக்கம் 223, மின்சாரநிலைய வீதியில் இயங்கும் என்பதை, வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு மிக மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

பெட்டா எசன்ஸ்
சப்பிளையர்ஸ்
223, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Uduvil Girls' College
Uduvil

FURTHER EDUCATION PROGRAMME
A FULL TIME COURSE IN
Computer Programming
AND
Data Processing

Languages: Basic, Cobol And Word Processing leading to

Diploma in Computer Programming
and
Understanding Computers
(PITMAN — LONDON)
Lectures and Practicals on
Radio—Shack, Acorn Computers

Week - Daysfrom 9-00 a. m. to 4-00 p.m.
Duration 4 Months.
Commencing 1st. September 1987
((Aptitude test & Introduction)

(Course Fee Rs. 1,500/- for Each)

Director

I. A. B. — Preliminary, Intermediate, Final

Home Economics — Dress Making, Flower Making, Cake Making & Icing

National Certificate in English
Pitman London

PITMAN SHORTHAND TYPING
(Hostel Facilities Available)
Starts:- 1-9-87.

Director

எமது ஸ்தாபனம்
மீண்டும் 19-08-87 முதல்
★ பழைய இடத்தில் ★
★ இயங்குகின்றது ★

★ சகலவிதமான ஆயுள்வேத மருந்துகள்
★ கோவில் அபிஷேகப் பொருள்கள்
★ வாசனைத் திரவியங்கள்

எப்பொழுதும்:
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

க. செ.
கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கிளை:
இல. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வு நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் அமைப்பு

## கிராம ரீதியாக முயற்சி

யாழ்ப்பாணம், ஆக. 24
இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் முயற்சிகளில் விடுதலைப் புலிகள் ஈடுபடவிருக்கின்றனர்.

முதற் கட்டமாக பலாலி, கோட்டை ஆகிய இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் தமது இருப்பிடங்களை இழந்த மக்களுக்கு அவர்களது வீடுகளை அமைத்து, அவர்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கையில் புலிகள் ஈடுபடுவர்.

இதுதொடர்பாக விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. திலீபன் தெரிவித்ததாவது:-

பெரும் இழப்புகளுடன் இடம்பெயர்ந்துள்ள மக்களைச் சொந்த இடங்களுக்கு மீண்டும் குடியேற்றும்முகமாக கிராம ரீதியாக பாதிக்கப்பட்ட இடங்கள் செப்பனிடப்பட்டு வருகின்றன.

கிராம ரீதியாக இத்தகைய புனர் நிர்மாண நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் தம்மால் இயன்ற உதவிகளை வழங்கவேண்டும்.

உங்களால் இயன்றதைப் பிரதேசப் பொறுப்பாளர் அலுவலகத்துக்குச்சென்று கொடுத்துதவுங்கள்.

இதுமட்டுமன்றி விடுதலைப் புலிகள் வீடு வீடாகச் சென்று உதவிகளைச் சேகரிப்பதிலும் ஈடுபடுவார்கள். அப்போது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைப் புரியுங்கள் — இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தார். (உ-10)

### புலிகள் உரையாடுவர்

மட்டக்களப்பு, ஆக. 24
மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் சமய, சமூக, அரசியல் பிரிவுகளைச் சந்தித்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் உரையாட இருக்கிறார்கள்.

இச்சந்திப்பில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும். (ஒ-21)

### பிரபல கேடி கைதானார்

கொழும்பு, ஆக. 22
அனுராதபுரம் பொலிஸ் பகுதியில் வசித்து வந்த பிரபல கேடியான சந்திரே என்ற நபரை பொலீஸார் தம்புத்தேக குகை ஒன்றில் வைத்துக் கைதுசெய்தனர்.

கடந்த வியாழன் இரவு இது இடம்பெற்றது.

ஏகே 47 ரைபிள்கள், ரி 65 ரைபிள்கள், 90 சுற்று ரவைகள், காக்கிச் சீருடைகள் குகையினுள் இருந்து கைப்பற்றப்பட்டன. (இ எ)

## மக்கள் முகம்

### ஏகமனதாக தெரிவு

திருகோணமலை கோணேஸ்வர வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளராக திரு. பெ. சி. கணேசலிங்கம் 10 ஆவது ஆண்டாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

திரு. கணேசலிங்கம் 10 ஆம் குறிச்சி கண்ணகை அம்மன் ஆலயத் தர்மகர்த்தாவாகவும், இந்துக் கல்லூரி ஆசிரியர் சங்கச் செயலவை உறுப்பினராகவும் இருக்கின்றார். இவர் பிரபல சமூக சேவையாளர். (ஒ-எ-150)

### கை மாயம்!

யாழ்-மாநகர சபை வளவில் அமைக்கப்பட்டுள்ள மேயர் துரையப்பாவின் வெண்கலச்சிலையின் ஒரு கையின் பகுதியை இனந்தெரியாதோர் பெயர்த்தெடுத்துச் சென்றுள்ளனர்.

# பழைய பாடசாலைகளுக்கே மாணவர்களை திருப்பி அனுப்புக!

## கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

பலாலி, ஆக. 24
கடந்த கால இராணுவநடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள், அவர்களது பழைய பாடசாலைகளுக்குத் திரும்பிச் செல்லக்கூடிய வகையில் அவர்களை வழிப்படுத்துமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் பாடசாலை அதிபர்களைக் கேட்டிருக்கின்றார்.

வீடுகளை முற்றாக இழந்து அதனால் பழைய இருப்பிடங்களுக்குத் திரும்பமுடியாத நிலையில் உள்ள மாணவர்களை மட்டும் தேவையான ஆவணங்களைப் பெற்று நிரந்தர மாணவர்களாக சேர்த்துக் கொள்ளும்படியும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எந்தப் பாடசாலையிலும் அகதி மாணவர் என்ற இரண்டாந்தர நிலையில் எந்த மாணவர்களையும் வைத்திருக்கக் கூடாதெனவும் அவர் அறிவித்திருக்கின்றார். (உ-119)

### வரியிறுப்பாளர் சங்கம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஆக. 24
வடபகுதி வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி, அவர்களுக்கென சங்கம் ஒன்று அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வரியிறுப்பாளர் சங்கத்தை அமைப்பது சம்பந்தமான முயற்சியில் முன்னாள் சிரேஷ்ட வரிமதிப்பாளர் திரு. ந. கருணை ஆனந்தன் ஈடுபட்டுள்ளார். (ஒ)

### அமைச்சரின் நெருங்கியசகா சுடப்பட்டார்

கொழும்பு, ஆக 24
வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் அமரசிறியின் நெருங்கிய சகா இனந்தெரியாத நபர் ஒருவரினால் சுடப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

## திருமலை மக்களின் முறைப்பாடுகள்: உடன் விசாரணை நடத்தப்படும்

திருகோணமலை, ஆக 24
பொதுமக்களின் முறைப்பாடுகள் பற்றி உடனுக்குடன் விசாரணை நடத்தப்படும்; நடவடிக்கையும் எடுக்கப்படும்.

—இப்படி இந்திய இராணுவக் கப்டன் உமேஷ் ஜோஷி உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

திருமலை நகர சபை மண்டபத்தில் இயங்கும் இந்திய இராணுவத்தின் பொதுசனத் தொடர்பு நிலையப் பொறுப்பாளராக கப்டன் ஜோஷி நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

கடந்த 13ஆம் திகதியில் இருந்து இந்த நிலையம் இயங்குகின்றது.

இந்திய இராணுவக் கேர்ணல் சந்திரமோஹன் தலைமையில் இந்தியத் துருப்புக்கள் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. (ஒ-எ-150)

## பெல்வத்தை முகாமிலிருந்து விடுதலையாகும் போதும் தாக்கப்படுகின்றனர்

### இந்திய படையினரிடம் புகார்

மட்டக்களப்பு, ஆக. 24
பெல்வத்தை தடுப்பு முகாமிலிருந்து விடுதலையாகிய தமிழ் - முஸ்லிம் இளைஞர்கள் விடுதலையாகும் போது முகாம் அதிகாரிகளால் தாக்கப்பட்டனர்.

இதுகுறித்து இந்திய சமாதானப் படையினரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது:

மேற்படி முகாமிலுள்ள 528 பேரில் 490 பேர் விடுதலையாகி கப்பல் மூலம் திருமலை கொண்டு வரப்பட்டு விமானம் மூலம் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட இளைஞர்கள் 120 பேர்விடுதலையாகி விமான நிலையம் வந்தடைந்தவுடன் தமது சகாக்கள் 38 பேர் விடுதலையாகி இறுதி நேரத்தில் முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகவும்.

அவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் இந்திய இராணுவ அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர்,

இவ்விடயம் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர். (ஒ-21)


புதிதாக ஆரம்பமாகியுள்ள

**தொழில் நுட்ப வகுப்புகள்**

AIR CONDITION & REFRIGERATION
காலம்: 6 மாதம் கட்டணம்: 1250/

**RADIO--T.V. DECK**
வாரநாட்கள் & வார இறுதி நாட்கள்
காலம்: 6 மாதம் கட்டணம் 850/-

Electrical Wiring
காலம்: 3 மாதம் கட்டணம் 350/-

Motor Mechanism
காலம்: 4 மாதம் கட்டணம் 450/-

உங்கள் பதிவுகளுக்கு

North Ceylon
TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane
JAFFNA.


# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# எமது நோக்கு நிறைவேறும்வரை 'சயனைட்' எம்மிடம் இருக்கும்

## அம்பாறைப் பொறுப்பாளர் கூறுகிறார்

அம்பாறை, ஆக. 24
'ஆயுதங்களை நாம் கீழே வைத்தாலும் எமது இளைஞர்கள் 'சயனைட்டை'த் தம்முடனேயே வைத்துக் கொண்டுள்ளனர். எந்த நோக்கிற்காக நாம் சயனைட்டை ஏற்றோமோ, அந்த நோக்கு நிறைவேறும் வரை அது எம்முடன் இருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை - மட்டக்களப்புப் பிராந்திய அரசியல் பிரிவின் பொறுப்பாளர் திரு. இ. பிரான்சிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவுப் பிரதேச தமிழீழ விடுதலைப்புலிகளின் செயலகத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்தத் திறப்பு விழாவில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காரைதீவு புனர்வாழ்வு சபை இணைத் தலைவரும், முன்னாள் கிராம சபைத் தலைவருமான டாக்டர் திரு.மா. பரசுராமன் தலைமையில் திறப்பு விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது.

திரு. பிரான்ஸிஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

மீண்டும் போராளிகளின் போராட்ட நிலை தொடராது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை எமது போராட்டம் இன்னும் முடிவடையவில்லை, அது தமிழ்ஈழத்தில் தான் முடிவடையும்.

இன்று எமது போராட்ட வடிவமே மாறி இருக்கிறது. போராட்டம் முடிவடையவில்லை இந்த நிலையில்மக்களின் ஆதரவு தான் எமக்கு முக்கியம்.

காழ்ப்புணர்ச்சிகள் தவிர்க்கப்பட்டு, புரிந்துணர்வுடன் நாம் சகலரும் செயற்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கல்முனை மாவட்ட அமைப்பாளரும், அம்பாறை பிராந்திய அரசியல் பொறுப்பாளருமான திரு. கே. லக்ஷ்மணன் (ரமணன்) உரையாற்றுகையில்;

''தமிழீழம் கிடைக்காதவரை எமது சிந்தனைச் சிதறல்கள் ஓயாது. கிடைத்திருக்கும் சலுகையை ஒருபடியாகவே கருதுகின்றோம்'' —என்றார். (ஒ-14)

### வர்த்தகர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 24
ஸ்ரீ லங்கா இராணுவ அட்டூழியங்களால் தமது சொத்துக்கள் யாவற்றையும் இழந்து நிற்கும் வர்த்தகர்களை கட்டடச் சொந்தக்காரர்களும் நில உரிமையாளர்களும் கடைகளில் இருந்து வெளியேற்ற முனைவது மனிதாபிமானமற்ற, வேதனைக்குரிய செயலாகும்:

—இப்படி யாழ்ப்பாண வர்த்தகர்கள் சங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### கலாசாலைகள் 31இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 24
பலாலி ஆசிரிய கலாசாலை, கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆகியன 3ஆம் தவணைக்காக 31-8-87ஆம் திகதியே ஆரம்பமாம் என்று கலாசாலை அதிபர்கள் அறிவிக்கின்றனர்.

இக்கலாசாலைகள் செவ்வாயன்று(25.8.87) ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டு இருந்தது. (உ-ஒ)

## சகோதரர் இருவர் தாக்கப்பட்டு கொலை

### பரந்தன் பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி, ஆக. 24
இனந் தெரியாதவர்களால் தாக்கப்பட்டு இரு சகோதரர்கள் மரணமானார்கள்

இச்சம்பவம் பரந்தன் ஐந்தாம் வாய்க்கால் என்னுமிடத்தில் அண்மையில் இடம் பெற்றது.

மரணமானவர்கள் சு. இராசசேகரம், சு. சக்திவேல்.

இவர்களது மரண விசாரணையை கிளிநொச்சி நீதிவான் எஸ். வரதராஜன் மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையை கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை நடத்தினார்.

மரண விசாரணையின் போது சாட்சியங்களை பொலிஸ் உத்தியோகத்தர் சு. விநாயகமூர்த்தி, பரந்தன் கிராம சேவகர் எஸ். கருணானந்தன் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

மரண விசாரணை முடிவில் கொலை எனத் தீர்ப்பளித்தநீதிவான் சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார். (ஒ-76)

## கிளிநொச்சிச்செய்திகள்

### சான்றிதழ் வழங்கப்பட்டது

கிளிநொச்சி, ஆக. 24
கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் (வட்டக்கச்சி) பொது விவசாய குறுகிய காலப்பயிற்சியை முடித்துக் கொண்ட யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் பயிற்சி நிலைய விவசாய உத்தியோகத்தர் எஸ். ஏ. அருள்ஞானம் தலைமையில் நடைபெற்றது.

பயிற்சியை முடித்துக் கொண்ட சுமார் 22 யுவதிகளுக்கான சான்றிதழ்களை விவசாயப் பண்ணை முகாமையாளர் திரு. எஸ். அருணாசலம், விவசாயப் பயிற்சிப் பண்ணை முகாமையாளர் திருமதி வி. ரி. ஞானதேவி ஆகியோர் வழங்கினர். (ஒ-76)

### கந்தன் ஆலயம் திருத்த நிதி

கிளிநொச்சி, ஆக. 24
கடந்த காலத்தில் அசம்பாவிதங்களினால் சேதமுற்ற கிளிநொச்சி கண்டி வீதியில் இருக்கும் கந்தசுவாமி கோவில் திருத்த வேலைகளுக்கு சுமார் ஒன்றரை லட்சம் ரூபா நிதி தேவைப்படுகிறது.

இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து தருமாறு ஆலய நிர்வாக சபையினர் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. தேவசிகாமணி ஊடாக இந்து கலாசார அலுவல்கள் அமைச்சைக் கோரியுள்ளனர். (ஒ-76)

### பதவி ஏற்பு வைபவம்

கிளிநொச்சி, ஆக. 24
கிளிநொச்சி-பரந்தன் ரோட்டரிக் கழகத்தின் நடப்புவருட புதிய தலைவர் பதவி ஏற்பு வைபவம் எதிர்வரும் 31 ஆம் திகதி பி. ப. 2 மணியளவில் பரந்தனில் நடைபெற உள்ளது. (ஒ-76)

### ரூபா ஒரு லட்சம் நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி, ஆக. 24
கிளிநொச்சிக் கச்சேரி திட்டமிடல் பணிமனைக் கட்டடத்தின் இரண்டாம், மூன்றும் கட்ட, கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக 1987 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து சுமார் ஒருலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இக்கட்டட வேலைகளை கிளிநொச்சிஆனந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது. (ஒ-76)

## இணைப்பு விடயம்:

# ஒரு வருடகால அவகாசம் போதாது

## முஸ்லிம் குழு வலியுறுத்து

மட்டக்களப்பு, ஆக. 24
வடக்கு - கிழக்கு இணைப்பு விடயத்தில் கிழக்கு மாகாண மக்களின் நிலையை வெளிப்படுத்தஒருவருடகாலஅவகாசம் போதாது. இதற்கான கால அவகாசம் குறைந்தது மூன்று வருடங்களாவது நீடிக்கப்படல் வேண்டும்.

மேற்படி கோரிக்கையை தமிழ்-முஸ்லிம் அமைச்சர்களை சந்தித்த மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் சமய, சமூக அரசியல்பிரமுகர் குழுஒன்று வலியுறுத்தியுள்ளது.

காத்தான்குடி பட்டின சபை முன்னாள் தலைவரும் சிரேஷ்ட முஸ்லிம் அரசியல்வாதியுமான அல்ஹாஜ் ஏ. அகமத் லெப்பை தலைமையிலான இக் குழுவில் சுமார் 20 பேர் இடம் பெற்றனர்.

இக் குழுவினர் அமைச்சர்களை தனித்தனியாக சந்தித்து உரையாடினர்.

இச் சந்திப்பு தொடர்பாக பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், கிழக்கு மாகாண அலுவல்கள் வழமைக்கு திரும்ப ஒருவருட காலம் போதாது.

அதுமட்டுமல்ல வடக்கு கிழக்கு இணைந்த அமைப்பின் செயற்பாடுகள் பற்றி புரிந்துகொள்ள ஒரு வருடம் போதாது என்பதை சந்திப்புகளின் போது வலியுறுத்தி உள்ளோம் எனத் தெரிவித்தார். (ஒ-21)

### பூநகரி சேத விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஆக 24
பூநகரிப் பகுதியில் இராணுவத் தாக்குதல்களினால் பாதிப்படைந்த வீடுகள், கடைகள், சொத்துக்கள் விவரங்களை பூநகரி பிரசைகள் குழு சேகரித்து வருகின்றது.

யாழ் பிரசைகள் இணைப்புக்குழு, அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் ஆகியவை கேட்டுக்கொண்டதற்கமையவே விவரங்கள் சேகரிக்கப்படுவதாக பூநகரி பிரசைகள் குழுத் தலைவர் திரு. பொ. தங்கராசா தெரிவித்தார். [ஒ-7]


**கேள்விப்பத்திரம்**

Lanka Cement Limited
Kankesanthurai

பொதி நிரப்பும் பகுதியிலிருந்து (PACKING PLANT)
துறைமுகத்திற்குச் (HARBOUR)
சீமெந்து கொண்டு செல்லுதல்.
லொறியிலிருந்து இறக்குதல்.
கப்பலுக்குள் ஏற்றி அடுக்குதல்.
ஆகியவற்றிற்கான கேள்விப் பத்திரம்(TENDER)

TENDER No: LCL/H/T/01/87

காங்கேசன்துறையில் உள்ள எமது சீமெந்துத் தொழிற்சாலையின் பொதி நிரப்பும் பகுதியிலிருந்து (PACKING PLANT) துறைமுகத்திற்குச் (HARBOUR) சீமெந்து கொண்டு செல்லுதல், லொறியிலிருந்து இறக்குதல், கப்பலுக்குள் ஏற்றி அடுக்குதல் ஆகியவற்றிற்கான கேள்விப் பத்திரங்கள் (TENDERS) கோரப்படவுள்ளன.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் (Tender-Documents) விநியோக அதிகாரியின் காரியாலயத்தில் சாதாரண வேலை நாட்களில் காலை 8-30 முதல் மாலை 4-00 வரையிலும் 29-8-87 சனிக்கிழமை பகல் 12-00மணிவரையும் மீளப் பெறமுடியாத வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 03 - 09 - 87 மாலை 4-00 மணி வரை விநியோகிக்கப்படும்.

கேள்விப்பத்திரதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 04 - 9 - 1987 முற்பகல் 10-00 மணிக்கு கேள்விப்பத்திரதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

பிரதிப் பொதுமுகாமையாளர்
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.
22.8.1987


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (சின்னஞ் சிறு விளம்பரம்)

### விற்பனைக்கு

திருவாசகம் 112/- ஸ்ரீமத் பகவத்கீதை 98/- விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் ஸ்ரீமத் ராமகிருஷ்ண தபோவன வெளியீடு திருப்பராயத்துறை விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.

நல்லைநகர் நூல்-யாழ்ப்பாண இராச்சியத்தினதும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலினதும் வரலாறு கூறும் ஆய்வு நூல் கந்தையா குணராசா எம். ஏ. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம், (1455)

### தேவை

சிறாக தொடர்ந்து இயங்கிக் கொண்டு இருக்கும் பேக்கரிக்கு ஆட்கள் தேவை. பாண், பிஸ்கட், பணிஸ், கேக் போன்ற வேலை தெரிந்தவர்களுக்கும் பழகுபவர்களுக்கும் இடம் உண்டு. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. வீட்டுப் பணிப்பெண் ஒருவரும் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பொ. நிரோஜா, ஊறணி, வல்வெட்டித்துறை. (1860)

### நிவாரணம்

கொடிகாமம், ஆக. 24

செஞ்சிலுவைச் சங்கத்தின் நிவாரணப் பொருள்கள் நாவற்காடு கிராம சேவகர் பிரிவில் சுமார் 500 குடும்பங்களுக்கும் கொடிகாமம் கிராம சேவை அலுவலர் பிரிவில் சுமார் 950 குடும்பங்களுக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-75)

# இடம்பெயர்ந்த 4,000 பேருக்கு

## நிவாரணம் இல்லை

பச்சிலைப்பள்ளி, பூநகரி, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் வடமராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து சுமார் 4,000 பேர் உள்ளனர். இவர்களுக்கான இந்திய நிவாரணப் பொருள்கள் இன்னமும் வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ள சகல அகதிகளுக்கும் இந்திய நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்ட அகதிகளின் வடமாரட்சி வீடுகள் முற்றாக அழிந்துவிட்டதால் பலர் அங்கு திரும்ப முடியாத நிலை இன்னமும் உண்டு.

### பாராட்டு விழா

இன்று நடைபெறும் நல்லூர் தீர்த்தத் திருவிழாவின் போது மிருதங்க வித்துவான் திரு. எஸ். மகேந்திரன், வாசிப்பின் பின் அதே மேடையில் பாராட்டி பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார்.

மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பார். (ஒ)

### பிரதமர் தலைமையில் கமிட்டி

கொழும்பு, ஆக. 24

நாடாளுமன்ற நடவடிக்கை பற்றிய செய்திகளைத் தணிக்கை செய்ய பிரதமர் தலைமையில் மூன்று பேரைக் கொண்ட தணிக்கைக் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகியோர் ஏனைய இரண்டு உறுப்பினர்கள் ஆவர்.

கடந்த வியாழன் நடைபெற்ற நாடாளுமன்ற விவாதங்கள் எதையும் இக் கமிட்டி தணிக்கை செய்யவில்லை. (இ-எ)

# கச்சேரி லேனில் நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஆக. 24

துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்திய இளைஞர்கள் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளை அடித்துச் சென்றனர்.

யாழ்ப்பாணம் கச்சேரி லேனில் சனிக்கிழமை இரவு 9 மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

சம்பவதினம் 5 இளைஞர்கள் துப்பாக்கி, மற்றும் ஆயுதங்களுடன் சென்று வீட்டுக்காரர்களைப் பயமுறுத்தினர். சிலர் மது அருந்தியும் இருந்தனர்.

நகைகளைக் கண்டு பிடிக்கும் கருவி தம்மிடம் இருப்பதாகவும் தேடிக் கண்டுபிடிக்க முன்னர் நகைகளைத் தந்துவிட்டால் தப்பிக் கொள்ளலாம் என்றும் அவர்கள் பயமுறுத்தி ரூபா 70 ஆயிரம் பெறுமதியான நகைகளுடன் தப்பிச்சென்றனர்.

வீட்டுக்காரர் பார்வை குறைந்தவர் என்று கூறப்படுகின்றது

இச்சம்பவம் தொடர்பாக வீட்டில் இருந்தவர்கள் உடனடியாக விடுதலைப் புலிகளின் முகாமில் முறையிட்டனர்.

விடுதலைப் புலிகளின் உதவியுடன் இளைஞர்களைத் தேடும் வேட்டை உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது. (இ)

# உதைபந்தாட்ட பயிற்சி முகாம்

## இன்று ஆரம்பமாகிறது

குருநகர், ஆக. 24

யாழ் - உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், குருநாகல் உதைபந்தாட்டச் சங்கக் கோஷ்டிக்கும் இடையே இவ்வாண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற இருக்கும் உதைபந்தாட்டப் போட்டிக்கு யாழ்-உதைபந்தாட்டக் குழுவைத் தெரிவு செய்வதற்கான உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் இன்று 24ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரை யாழ்-சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இன்று தொடக்கம் 27ஆம் திகதி வரை பிற்பகல் 3-00 மணி முதல் 6-00 மணிவரை பயிற்சி நடைபெறும்.

தெரிவு செய்யப்பட்ட 25 வீரர்களுக்கான முழுநாள் பயிற்சிகள் 28ஆம் திகதி பிற்பகல் 3-00 மணியில் இருந்து 6 00 மணிவரை 30ஆம் திகதி வரை நடைபெறும்.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் சகல கழகங்களும் சிறந்த வீரர்களைப் பயிற்சி முகாமுக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். உதைபந்தாட்டச் சங்கச் செயலாளர் திரு. எம். தேவதாஸ் கேட்டுள்ளார்.

முழுநாள் பயிற்சிக்கு தெரிவானவர்களுக்கு தங்குமிட வசதி, உணவு வசதி போன்றவற்றை யாழ் - உதைபந்தாட்டச் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது. (இ-51)

### பூவா, தலை-----

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

யைக் கேட்க மக்கள் தயாராக இல்லை; பி. பி. சியைத் தான் மக்கள் கேட்கின்றார்கள்.

**அக்மீமன எம். பி.**

அக்மீமன எம். பி. றிச்சார்ட் பத்திரன:

நடக்கும் வன்செயல்கள் எல்லாவற்றிற்கும் ஜே. வி. பி. மீது பழி சுமத்தக்கூடாது. பொறுப்பானவர்களைக் கண்டு பிடிக்கப் பூரண விசாரணை நடத்துங்கள்.

பிரதமர் காந்தியைத் தாக்கிய கடற்படைச் சிப்பாய் ஜே.வி.பி.காரர் என்று கூறப்பட்டது. ஆனல் அந்தச் சிப்பாயின் குடும்பமே யு.என்.பிக் குடும்பம். 1977 இல் தங்கள் வீட்டையே யு. என். பி கந்தோராகப் பாவிக்க அனுமதித்த குடும்பம் அது.

எம். பிக்கள் நாடாளுமன்றம் செல்வது இன்று புதைகுழியை நாடிச் செல்வது போன்றுள்ளது.

எனது தொகுதியில் உள்ள ஒவ்வொரு சிங்கள இளைஞனும் கைது செய்யப்பட்டுவிட்டான்.

மகா சங்கத்தைச் சேர்ந்தவர்களும் சிறைகளில் உள்ளனர். சிறைகளுக்குச் சென்று அவர்களுக்குத் தானம் வழங்க அனுமதிக்கப் படவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை பெரும்பான்மை மக்கள் எதிர்க்கின்றனர். (இ-எ)

### நஷ்டஈடு விரைவில் கிடைக்கும்

அம்பாறை, ஆக. 24

இழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்திற்கென வந்தாறுமூலைப்பகுதியில் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நஷ்ட ஈடு மிக விரைவில் வழங்கப் பட இருக்கின்றது.

நஷ்டஈடு வழங்குவதற்கான நிதியை பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவும், திறைசேரியும் வழங்கியுள்ளதாக அறிய வருகின்றது.

இந்த நஷ்டஈடு மிக விரைவில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மூலம் வழங்கப்படும் என்றும், நஷ்டஈடு வட்டியுடன் வழங்கப்படுமெனவும் தெரியவருகின்றது. (ஒ-14)

## திருமண அழைப்பு

உ

| | | |
|---|---|---|
| திருவளர்ச் செல்வன் நவரட்ணம் இராம்குமாரன் அவர்களுக்கும் | ★★★ | திருவளர்ச் செல்வி முத்துக்குமாரசுவாமி மகாலஷ்மி அவர்களுக்கும் |

நிகழும் பிரபவ ஆண்டு ஆவணி மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை (26 - 08 - 87) முற்பகல் 9 - 35 க்கும் 11 - 30 க்குமிடையில் வரும் துலா லக்கின நல்லோரையில் திருவருட்துணை கொண்டு அவுஸ்திரேலியாவில் திருமணம் நடைபெறும்.

| | |
|---|---|
| இங்ஙனம் | இங்ஙனம் |
| திரு. திருமதி ஜெயகாந்திநாதன் | திருமதி ப. முத்துக்குமாரசுவாமி |
| 3, Liddell Heights | ஏழாலை மேற்கு |
| Leeming W. A. 6155, | சுன்னாகம், |
| Australiya. | இலங்கை. |

(1563)


"கந்தா கதிர்வேலவனே! உமையாள் மைந்தா! குமரா! மறைநாயகனே"

- யாழ்நகரில் சிறந்த கலர் / கறுப்பு - வெள்ளை படப்பிடிப்பாளர்
- புளக் தயாரிப்பாளர்
- கனன் NP 271 (CANNON - NP 271 COMPUTERIZED) கம்பியூட்டர் மூலமாக போட்டோ ஸ்ரட் பிரதி செய்பவர்கள்
- கம்பியூட்டர் மூலம் கலர் பிலிம் சுருள்கள் கழுவி படம் அடிப்பவர்கள்

ஆகியவற்றிற்கு

★ ஞானம்ஸ் ஸ்ருடியோ ★

301, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல : 23067






குரவா! குமரா குலிசாயுத! குஞ்சரவா! சிவயோ கதயா பரனே!

எப்பொழுதும் எல்லோரதும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவை தேசிக்காய் வாசனை கொண்ட

★ எம்டீ சோப் ★

வகைகள்




எம்டீ என்ரபிறைஸ்




அச்சுவேலி

● தரமான உள்ளூர் உற்பத்திகளை ஆதரியுங்கள் ●



## DIPLOMA COURSES

NURSING–தாதிப்பயிற்சி நெறியில் டிப்புளோமா

and

PHARMACY–பாமஸி பயிற்சி நெறியில் டிப்புளோமா

புதிதாக ஆரம்பமாகியுள்ள மேற்படி பயிற்சி நெறியில் பயில்பவர்கள் உடன் தொடர்புகொள்க.

★ NORTH CEYLON ★
TECHNICAL INSTITUTE
14, ST. PETERS LANE,
JAFFNA



வாடிக்கையாளர்களுக்கு
விசேட அறிவித்தல்

'சீமாட்டி'

மீண்டும் யாழ் ராணி சினிமா அருகாமையில் 19-8-87 முதல் திறக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

'சீமாட்டி'

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



## அறிவித்தல்

மக்கள் இன்னல் தீர்க்கும் நல்லைக் குமரனே! வருக!! வருக!!!

கடந்தகால அனர்த்தங்களினால் இடம் மாற்றம் செய்யப்பட்ட

★ கணேசன் ★
-------ஸ்ரோர்ஸ்-------

பிடவை வியாபார ஸ்தாபனம்

மீண்டும் இல: 63 கே. கே. எஸ். வீதியில் தொடர்ந்து வியாபாரத்தை நடத்துகின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

கணேசன் ஸ்ரோர்ஸ்
இல: 63, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.



## ஆங்கிலம் படிக்கிறீர்களா?

தமிழ்மொழி மூலம் ஆங்கிலத்தை முறையாகவும், இலகுவாகவும் போதிப்பதற்கு அரிய நூல் வெளிவந்துவிட்டது!

● லேணேர்ஸ் இங்கிலிஷ் ●

ஆங்கில மொழியைப் பேச, எழுத, வாசிக்க சரியான முறையில் இலகுவாக சொல்லித் தருகிறது இந்நூல்.

இது ஒரு "வரதர் வெளியீடு". விலை ரூபா 16-50 எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

நல்லூர்த் திருவிழா அமைப்பிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பீடாபாக்கு, கொப்பரு, த
கேசரி, கஸ்தூரிமஞ்சள், இந்தியன் பட்டுத் துண்டுகள், சிங்கப்பூர் குங்கிலியம், தாய் வான் குங்கிலியம், சுத்தமான தேன், நெய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப் பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் தொகையாகவும் சில்லறையாகவும் பெற் றுக்கொள்ளலாம்.
**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இ. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**உதயன்**

24 - 08 - 1987 திங்கட்கிழமை

பீடாபாக்கு, கொப்பரு, தாம்பூல கேசரி, கஸ்தூரிமஞ்சள், இந்தியன் பட்டுத் துண்டுகள், சிங்கப்பூர் குங்கிலியம், தாய் வான் குங்குலியம், சுத்தமான தேன், நெய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப் பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் தொகை யாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள் ளலாம்.
**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# மலையகத் தமிழரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவது மீளாய்வு செய்யப்பட வேண்டும்

## தொண்டமான் கோரிக்கை

கொழும்பு, ஆக. 24
மலையகத்தமிழரை இந் தியாவுக்குத் திருப்பி அனுப்பும் பிரச்சினை மீளாய்வு செய்யப்பட வேண்டும். மலையகத் தமி ழரின் பிரசா உரிமைப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க இதுதான் சரி யான சந்தர்ப்பம்.

அமைச்சர் தொண்ட மான் தலைமையிலான இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸ் இந்திய அரசிடம் முன்கண்ட வாறு கோரிக்கை விடுத் துள்ளது.

இந்திய—இலங்கை ஒப் பந்தத்தில் கைச்சாத்திட பிரதமர் காந்தி கொழு ம்பு வந்து இருந்த சம யத்தில் இணை அமைச்சர் நட்வர்சிங்கிடம் இது பற் றிப் பேசியதாக அமைச் சர் தொண்டமான் ஊர் ஜிதம் செய்தார்.

1964 இல் ஏற்பட்ட சிறிமா—சாஸ்திரி ஒப்பந் தம், அதை அமுல் நடத் துவதில் ஏற்பட்ட தாம தம், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஏனைய உடன் பாடுகள் பற்றி அப் போது பேசப்பட்டதாக வும் அமைச்சர் சொன் னார்.

மலையகத் தமிழர் பிரச் சினை பற்றிய சகல உடன் பாடுகளையும் மீளாய்வு செய்வதாக இந்திய அரசு அதிகாரிகள் இலங்கைத் தொழிலாளர் காங்கிர ஸுக்கு உறுதி அளித்தி ருப்பதாகக் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித் தன.

1964 சிறிமா — சாஸ் திரி ஒப்பந்தத்தின் படி 5½ லட்சம் மலையகத் தமி ழருக்கு இந்தியா பிரசா வுரிமை வழங்க வேண் டும். இலங்கை அரசு 3 லட்சம் பேருக்கு வழங்க வேண்டும்.

1974இல் இரண்டு நாடு களும் செய்துகொண்ட இன்னொரு ஒப்பந்தத் தின்படி இலங்கை மேல திகமாக 75 ஆயிரம் பேருக்கும், இந்தியா மேலதிகமாக 75 ஆயிரம் பேருக்கும் பிரசாவுரிமை வழங்க வேண்டும்.

இரண்டு ஒப்பந்தங்க ளின் படி இந்திய 6 லட் சம் பேருக்கும், இலங்கை 3 லட்சத்து 75 ஆயிரம் பேருக்கும் பிரசாவுரிமை வழங்கவேண்டும்.

(இ-எ)

## மலையகத்தில் பதற்றம் ஏற்படுத்த முயற்சி

கொழும்பு, ஆக. 24
மலையகத் தமிழர் வாழும் பகுதிகளில் பதற் றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இனவாதக் கோஷ்டி ஒன்று ஈடுபட்டு வருவதாக முறையிடப் பட்டுள்ளது.

கடந்த வியாழன் நுவ ரெலியா மாவட்டத்தில் உள்ள வேவன்டன் தோட்டத்துக்குள் காக் கிச்சட்டை அணிந்த கோஷ்டி ஆயுதங்களைக் காட்டி தமிழ்த் தொழி லாளர்களைப் பயமுறுத் தியதாம்.

அச்சத்தில் தமிழ்ப் பெண்கள் அன்றிரவு முழுவதும் காட்டுக்குள் ஒளித்திருக்கவேண்டிய தாயிற்று.

இக்கோஷ்டியினர் ஏற் கனவே கிராமவாசிகளி டம் இருந்து துப்பாக்கி களை அபகரித்துச் சென்றுவிட்டனர் (இ.எ)

## நல்லையில் தேர் காண எல்லையில்லா அடியார் கூட்டம்

### சென்ற வருடங்களைவிடப் பலமடங்கு

யாழ்ப்பாணம், ஆக. 24
நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நேற்றைய தினம் வெகு கோலாகலமாக நடை பெற்றது.

நாட்டுநிலைமை ஓரளவு சீரானதன் காரணமாக நாட்டிலுள்ள சகலபகுதி மக்களும் நல்லூர் முரு கன் தேரேறி வீதிவலம் வரும் காட்சியைக் கண்டு களிக்க கோவில் பகு தியை நிறைத்திருந்த னர். சென்ற சில வரு டங்களைவிட பலமடங்கு அடியார்கள் பெருந்திர ளாக வந்திருந்தனர்.

நல்லூர் முருகப்பெரு மான் எழுந்தருளி வாசல் பகுதிக்கு வரும்போது கோவிலிலுள்ள ஆறு மணிகளும் ஒலித்த சத் தம் ஒருபுறம் — பக்தர்க ளின் அரோகரா சத்தம் இன்னொருபுறம்—மங்கள இசைகள், பக்தர்களின் பஜனைப் பாடல்கள் ஒலி த்த ஒலிகள் வேறொரு புறமாக இடம்பெற்ற அற்புத நிகழ்ச்சிகளோடு சூரிய பகவானின் ஒளி முருகப் பெருமானின் முகத்தில் விழும்போது உண்டான கவர்ச்சி அடி யார்கள் எல்லோரையும் மெய்மறக்கச் செய்தது.

முருகப்பெருமான் தேரேறி வீதிவலம்வரும் போது மக்கள் திரளைச் சமாளிப்பதற்குத் தொண்டர்கள், சார ணர்கள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் பெரும் கஷ்டப்பட வேண்டியதாயிற்று.


(அ-161

**Short - Hand**
**&**
**Typing classes**

தமிழ், ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

London Pitman Dccember 1987
பரீட்சையில் தேர்ச்சிபெற

**North Ceylon**
**TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane,
JAFFNA.




### இந்திய -- இலங்கை ஒப்பந்தம்

## அவசர மசோதாவாக சமர்ப்பிக்கப்படமாட்டாது

கொழும்பு, ஆக. 24
இந்திய இலங்கை ஒப் பந்த யோசனைகள் அடங் கிய நகல் சட்டத்தை அவசர மசோதாவாக நாடாளுமன்றத்தில் அர சாங்கம் சமர்ப்பிக்காது.

இப்படி பிரதமர் ஆர். பிரேமதாசா தெரிவித்தி ருக்கின்றார்.

மகரகம எம். பி. திரு. தினேஷ் குணவர்த் தனவுக்கு அனுப்பிய எழுத்துமூலமான பதில் ஒன்றில் இந்த உறுதி மொழியை பிரதமர் வழங்கியுள்ளார்.

இந்திய-இலங்கை ஒப் பந்தச் சட்டநகலை வர் த்தமானியில் பிரசுரிக்கா மல், 24 மணித்தியாலங் களில் உயர்நீதிமன்றத் தின் கருத்தைப் பெற் றுக்கொள்ள ஜனாதிபதி க்கு அரசமைப்புச் சட் டத்தின்கீழ் வழங்கப்பட் டுள்ள விதி பயன்படுத் தப்படுமா? என்று கேட்டு மகரகம எம். பி. திரு. தினேஷ் குணவர்த்தன பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்துக்கே பிர தமர் மேற்கண்ட பதிலை அனுப்பியிருக்கின்றார்.

சட்டமூலம் வர்த்த மானியில் பிரசுரிக்கப் படும். சாதாரணநடை முறையின்கீழ் சட்டமூல த்தைப் பரிசீலனைசெய்ய உயர்நீதிமன்றத்துக்குக் கால அவகாசம் வழங் கப்படும்.

இப்படிப் பிரதமர் தனதுகடிதத்தில் மேலும் வலியுறுத்திக் கூறியிருக் கின்றார்.

அரசமைப்புச் சட்டத் தின் 122ஆவது ஷரத் தின்படி,

நாட்டின் நலன்கருதி அவசரம் என்று அமைச்ச ரவை கருதினால் ஒரு நகல் சட்டத்தை 7நாளை க்கு முன்னர் வர்த்த மானியில் பிரசுரிக்கா மலே நாடாளுமன்றத் துக்கு அனுப்பிவைக்க லாம்.

121ஆவது ஷரத்து, இத்தருணத்தில் கடைப் பிடிக்கப்பட மாட்டாது.

121ஆவது ஷரத்துபின் வருமாறு கூறுகின்றது;

''ஒரு நகல் சட்டம் அரசமைப்புக்கு உட்பட் டதா என்பதை நிர்ண யிக்கும்படிகோரி பிரசை ஒருவர் உயர்நீதிமன்றத் துக்கு முறையிடலாம்.

''சாதாரண நடை முறையின்கீழ் அப்படி யான முறையீடுபற்றி விசாரணை நடத்தித் தனது கருத்தை மூன்று வாரங்களுக்கு இடையில் வெளியிடலாம்''.

(இ-எ)

## புதிய திகதி விரைவில்

கொழும்பு, ஆக. 24
ஒத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சி, பிரதேச சபைகளுக்கான தேர்தல் களுக்கான புதிய திகதி விரைவில் அறிவிக்கப் படும்.

இப்படிஅரசுசார்பு ஒப் சேர்வர் ஞாயிறு இதழ் செய்தி வெளியிட்டிருக் கின்றது. (இ-எ)

## சூடுபட்ட----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
மயக்க நிலையில் ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட் டிருந்த அவரின் உயி ரைக் காப்பாற்ற டாக் டர்கள் பெரும் முயற்சி எடுத்தனர்.

ஒரு குழந்தையின் தந் தையான சேனதிர, சுப்ராதர நிர்வாக அதி காரியாகப் பதவி உயர்வு பெற்ற பின்னர் கடந்த செவ்வாய்தான் முதல் முறையாகக் கடமைக் குச் சென்றார்.

மினுவாங்கொடை வாசி இவர். (இ-எ)

## கிழக்கு - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)
அடுத்த மாத முடிவிற் குள் சமர்ப்பிக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

இதே வேளை தமிழ்ப் பகுதிகளுக்கிடையே நேரடி பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்கு இந் தியா நூறு பஸ்களை இலங்கை அரசு ஊடாக தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பவுள்ளது.

(அ-10)

## வாக்கெடுப்பு . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
வெளியிட்டுள்ளது.

அப்போது தான் காலி யாக உள்ள வடக்கு, கிழக்கு நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களும் நடைபெறலாம்—

இப்படி அச் செய்தி மேலும் தெரிவித்தது.

(இ-எ)

## மேலும் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பத்துத் தினங்களுக்குள் நடைபெறலாம் என்றும், இறுதிக்கட்டப் பேச்சுக் கள் கொழும்பில் நடை பெறும் என்றும் கொழு ம்பில் அரசியல் வட்டா ரங்கள் தெரிவித்தன.

அதன்பின்னர் பெறு பேறுகள் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும்.

(இ-எ)

## 70-சத வீத . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தானமுறையில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆயுதங்களைக் கைய ளிப்பதற்கு காலக்கெடு கிடையாது

இப்படி திரு. டிக்ஸிற் தெரிவித்தார். (இ-எ)

## மகசீன் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வாறு சேட்டுக்கொண் டார்.

பூஸா இராணுவ முகா மில் உள்ளவர்கள் எப் பொழுதும் விடுதலை ஆக லாம்.

ஆனால் மகசீன் சிறைச் சாலையில் உள்ளவர்களை அரசு விடுதலை செய் யாது என்றே நான் நினைக்கின்றேன்.

சிறைச்சாலையில் பல இளைஞர்கள் சித்திரவ தைக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார் கள்.

மேலும் பல இளைஞர் கள் கொல்லப்படலாம். இது விடயத்தில் இந் திய செஞ்சிலுவைச் சங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறைச்சாலை சென்று பார்வையிட வேண்டும். அவர்கள் படும் வேதனைகளை அறி ந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு வணபிதா சிங்கராயர் இந்திய செஞ் சிலுவைச் சங்க உயர் அதிகாரியிடம் கேட்டுக் கொண்டார். (இ-10)

## யோகியும் மற்றும் இருவரும் யாழ் திரும்பினர்

யாழ்ப்பாணம், ஆக. 24
இந்திய சட்ட அதிபர் களுடன்பேச்சுவார்த்தை நடத்த கொழும்பு சென்ற விடுதலைப் புலிக ளின் பிரமுகர் திரு. யோகி, சட்டத்தரணி கள் திரு செ. கோடீஸ் வரன், திரு. முத்துக் கிருஷ்ணன் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினர்.

சட்டத்தரணிகள் இரு வரும் விடுதலைப் புலிகள் சார்பில் பேச்சு நடத்து வதற்காகவே கொழும்பு சென்றனர்.

இந்திய சட்ட அதிகாரி களுடன் சட்டத்தரணி கள் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் பேச்சு வார்த்தையில் எதுவித முன்னேற்றமும் காணப் படவில்லை என்றும் தெரி விக்கப்படுகிறது.

(இ-10)

## ஈ.என்.டி.எல்.எவ். கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 24
ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் (ஈ என். டி. எல். எவ்.) பொதுக்கூட்டம் ஒன்று இன்று கிளிநொச்சியில் நடைபெற உள்ளது.

கிளிநொச்சி கந்த சுவாமி கோவில் முன்ற லில் மாலை 4 மணிக்கு கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் ஈ. என். டி. எல். எவ். புளொட், ஈ பி. ஆர். எல். எவ். ரெலோ இயக்கங்களின் தலைவர்களும் உரை யாற்றுகின்றனர்.

(ஒ)

## இலங்கை வங்கி. . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
எஸ். அரியரட்ணம், முல் லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட முகாமையா ளர் திரு. என். சிவன், முன்னாள் இலங்கைவங்கி மாவட்ட முகாமையா ளர் திரு. ஸ்ரீ ரங்கநாதன் ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாக கலந்து கொண்டனர். பிரதேச முகாமையாளர் திரு. கனகரத்தினம் தமது பேச்சில் மேலும் தெரி வித்ததாவது:—

இதுவரை வங்கியில் இருந்து பணத்தை மீளப் பெறுவதற்கு ஒரு பிள் ளைக்கு தகுதியுடைய வய தெல்லை 21ஆக இருந் தது.

ஆனால், இத்திட்டத் தில் பிள்ளை 18 வயதை நிறைவு செய்யும் பொழுதே வங்கியில் இருந்து பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

குழந்தை பிறந்த உட னேயே இத் திட்டத்துக் கான கணக்கை பெற் றோர் வங்கியில் ஆரம் பித்துக் கொள்ளலாம்.

இதேபோல் பல சிறப் பம்சங்கள் இத் திட்டத் தில் அடங்கியுள்ளன — என்று தெரிவித்தார்.

பிள்ளைகள் சேமிப் புத்திட்ட ஆரம்ப நாளி லேயே 20 குழந்தைகள் பெயரில் சேமிப்புத் திட் டம் ஆரம்பிக்கப்பட் டது. (அ-10)

**New Master Institute**
Navalar Road, Jaffna.
G. C. E. A/L 1988.
Physics - Varnam
★ **HEAT** ★
ஆரம்பம்:- 29-8-87
நேர அட்டவணை:
Sat. & Sun. 7-30 — 8 30 a. m.

## 50 பேர் கொண்டகுழு விசாரிக்கிறது

கொழும்பு, ஆக. 24
நாடாளுமன்றக் கட்ட டத்தில் கடந்த செவ் வாய் இடம் பெற்ற கிரனேற் தாக்குதல் சம் பந்தமாக எம்பி ஒருவர் எடுத்த புகைப்படங்கள் பலவற்றை இரகசியப் பொலீஸார் பாரமெடுத் துள்ளனர்.

50 பேர் கொண்ட விசாரணைக் குழு, மூன்று பிரதம இன்ஸ்பெக்டர் கள் தலைமையில் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து விசாரணைகளை நடத்துகி ன்றது.

தாக்குதல் நடந்தஇட த்தை ஸ்கொட்லண்ட் யார்ட் பொலீஸ் அதி காரிகள் பார்வையிட்ட னர். (இ-எ)

## ரயில்கள் மோதின 37 பேர் காயம்

கொழும்பு, ஆக. 24
நீர்கொழும்பு—கொழு ம்பு பாதையில் பயணி கள் ரயில் ஒன்றுடன் சரக்கு ரயில் நேற்றுப் பகல் 12 மணியளவில் மோதியது.

இதில் 37 பயணிகள் காயமடைந்தனர். இவர் களில் 32 பேர் ராகம ஆஸ்பத்திரியிலும் 5 பேர் கொழும்பு பெரியாஸ்பத் திரியிலும் அனுமதிக்கப் பட்டனர்.

சரக்கு ரயிலின் சாரதி, ஆஸ்பத்திரியில் உயிரிழந் தார். (இ-எ)

## மின் கோபுரம் குண்டுவைத்து தகர்ப்பு

கொழும்பு, ஆக. 24
பசறையில் அதி மின் சக்தி வயர்களைத் தாங் கிய மின்கோபுரம் ஒன்று குண்டு வைத்துச் சேதப் படுத்தப்பட்டது.

## வடக்கு-கிழக்கு 10 ஆயிரம் புதிய வீடுகள்

கொழும்பு, ஆக 24
வடக்கு,கிழக்கு மாகா ணங்களில் பத்தாயிரம் புதிய வீடுகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கட்டிக் கொடுக்க உள் ளது.

இத்தகவலை புனர் வாழ்வு அமைச்சு வெளி யிட்டது. (இ-எ)

## பொறிவெடி: மற்றும்ஒருவர் காயம்

வடமராட்சி, ஆக 24
தொண்டமானாறு செல்வச் சந்நிதிக்கு கிழ க்குப் பக்கமாக உள்ள தனது வீட்டைப் பார்க் கச் சென்ற இளைஞர் ஒருவர் பொறிவெடியில் சிக்கிப் படுகாயம் அடை ந்தார்.

மாணிக்கம் நடராசா (28 வயது) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார். (இ-160)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 24-08-1987
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Monday August 24 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org